# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1888/6 - 2014 නොවැම්බර් මස 10 වැනි සඳුදා - 2014.11.10

*1888/6 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டம்***

*52 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டத்தின் 52 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டும், மின்சக்தி மற்றும் எரிசக்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் விதப்புரையின் பேரிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான்,*

(அ) இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணி, மின்சக்தி, கடத்தற் கருத்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு அவசரமாகத் தேவைப்படுகின்றதென்றும், அத்துடன்

(ஆ) பொதுமக்களின் பொது சேமநலத்திற்கும் நன்மைக்கும் சேவையாற்றுவதாகவிருக்கும் பொது நோக்கமொன்றாகவுள்ள மேற்சொன்ன மின்சக்தி கடத்தற் கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காகத் தேவைப்படுகின்றதென்றும்,

அபிப்பிராயப்படுவதால், மேற்சொன்ன காணி சொல்லப்பட்ட நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றதென இக்கட்டளைமூலம் வெளிப்படுத்துகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 1,
2014, நவெம்பர் 05.

**அட்டவணை**

காணியின் எல்லைகள்

இலங்கையின் சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை நிர்வாக மாவட்டத்தில் கல்பொட மற்றும் கினிகொட கோரளையில் ரம்புக்கணை பிரதேச செயலகப் பிரிவினுள் கெளடாவுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் கெளடாவுல்ல கிராமத்தில் அமைந்துள்ள அங்கீகாரம்பெற்ற நிலஅளவையாளரான எம். பி. ரணதுங்க அவர்களால் அளவிடப்பட்ட 2003.11.29 ஆந் திகதிய 4951 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1, 2, 3, 4 ஆகிய இலக்கங்களைக் கொண்ட காணித்துண்டுகளும், 1997.05.15 ஆந் திகதிய 4300 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2 மற்றும் 3 ஆகிய இலக்கங்களால் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளும் அடங்கலான 4 ஏக்கர் 0றூ. 5.83 பேர்ச்சஸ் நிலப்பரப்பைக் கொண்ட காணிக்கான எல்லைகள் கீழ்வருமாறு :-

வடக்கு : 4300 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள யொம்மானே கும்புற அட்டலாஹ காணித்துண்டு இல. 1 உம் 4951 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள அஸ்வெத்தும பில்லேவ, கெளடாவுல்லவிலிருந்து கண்டி - கொழும்பு வீதிக்குச் செல்லும் பாதையும்;

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*கிழக்கு* : 4951 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள கௌடாவுல்லவிலிருந்து கண்டி - கொழும்பு வீதிக்குச் செல்லும் பாதையும் காணித்துண்டு இல. 6 உம் (வீதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) ;

*தெற்கு* : 4951 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு இல. 5, 6 (வீதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) மற்றும் 4300 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள திம்பிரிகஹமுல கும்புற, கொங்கன் எலவும் ;

*மேற்கு* : 4300 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள கெந்தபிட்டிய, திம்பிரிகஹமுல கும்புற, கொங்கன் எல மற்றும் 4951 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள கொங்கன் எலவும் .

*பரப்பு* : 4 ஏக்கர் 0றூட் 5.83 பேர்ச்சஸ்.

உரிமைகோருபவர் : திரு. அருண அன்னாசிகல, லங்கா இந்துமதி கெஹெல்பன்னல மற்றும் ஏனையோர்.

*11-709*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.